# தமிழ்நாடு தட்டச்சு - கணினி பள்ளிகள் சங்கம்
# TAMILNADU TYPEWRITING - COMPUTER INSTITUTES' ASSOCIATION
(Regd. No : 43/2016)

Regd. Office : # 555/18, Gandhi Road, (Ist Floor), Kanchipuram - 631 501.
Communication Address : # 36, K.S.M. Nagar, Tollgate, Kanchipuram - 631 501.
E-mail : karthikmldr@rediffmail.com web : www.tntcia.com Cell : 94436 20767

L. MANOHARAN, T.T.C., State President, Cell : 94428 83275
M. KARTHIKEYAN, M.Com.,M.Phil.,M.A.,D.L.L.,T.T.C., State General Secretary, Cell : 94436 20767
L. SENTHIL, B.C.A.,D.C.P.,T.T.C., State Treasurer, Cell : 94430 82572
D.A. DHARMARAJ, B.A.,T.T.C., Vice President, Cell : 94432 82723
J. BARATHAMANI, T.T.C., Vice President, Cell : 90034 89826
A. SATHYAN, Join Secretary, Cell : 94435 08499


Letter No. 13/2017 dated 27/11/2017

பெறுதல்
உயர்மிகு. ஆணையர் அவர்கள்
தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
சென்னை 25

மதிப்பிற்குரிய அய்யா,

பொருள் - தட்டச்சு/சுருக்கெழுத்து தேர்வுகள் - மறுமதிப்பீடு மற்றும் விடைத்தாள் நகல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை - 1) அரசாணை எண்.307. உயர்கல்வி(பி.1) துறை நாள் 27.10.2017
2) தங்கள் அலுவலக மே.கு.எண்.112626/க்யூ.1/2009 நாள் 16.11.2017

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து மாணவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான விடைத்தாள் நகல் பெறுதல் குறித்த அரசாணை 27.10.2017 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அரசாணையில் உத்தரவு அமுல்படுத்தப்படுவதற்கான தேதி குறிப்பிடப்படவில்லை என்றால், அரசாணை வெளிவந்த நாள் முதல் அந்த உத்தரவு அமுலுக்கு வந்துவிட்டதாகவே கருதவேண்டும்.

கடந்த 23.10.2017-ல் வெளியான தட்டச்சு தேர்வு முடிவுகளின்படி 22.11.2017க்குள் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கலாம் என்றால் மேற்படி தேதிக்குள்ளாகவே வெளியான அரசாணைப்படி விடைத்தாள் நகல் பெற்றிட வழிவகை செய்யாமல் பிப்ரவரி 2018 தேர்வு முதல்தான் செயல்படுத்தப்படும் என்ற

அறிவிப்பு மாணவர்களிடையே ஏமாற்றத்தை தந்துள்ளது. இதனால் 23.10.2017-ல் வெளியான தேர்வு முடிவுகளால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்களது விடைத்தாள் நகல் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

விடைத்தாள் நகல் வழங்கிட அஞ்சல் செலவு உட்பட ரூ.50 கூட வராத நிலையில் ரூ.150 செலுத்தி விடைத்தாள் பெற விரும்புபவர்களால் அரசுக்கு வருவாய் ஏற்படுகிறது.

எனவே அரசாணையை உடனடியாக அமுல்படுத்தி கடந்த 23.10.2017அன்று வெளியான தேர்வு முடிவு விடைத்தாள் நகல்கள் பெற்றிட ஏதுவாய் உத்தரவு வழங்கிட வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

தங்கள் நம்பிக்கையுள்ள,

27.11.17

நகல் சமர்ப்பணம்

உயர்மிகு கூடுதல் இயக்குநர் (தேர்வுகள) தொறுக துறை/சென்னை.25

உயர்திரு. வட்டார அலுவலர் 2.